# 15

## சபை:

# இதன் மூப்பர்கள், அவர்களின் கடமைகள்

### சுய ஒழுங்கு

1. **பவுல், "எச்சரிக்கையாயிருங்கள்" என்று யாருக்குக் கூறினார் (அப். 20:28)?**
   - *அ. இந்தக் கொள்கை 2 கொரி. 13:5ல் எவ்வாறு எடுத்துரைக்கப் படுகின்றது?*
   - *ஆ. மற்றவர்களை இரட்சிக்கும் முன்னர் செய்ய வேண்டிய இரு விஷயங்கள் யாவை (1 தீமோ. 4:16)?*
   - *இ. முதலாவது யாருடைய வீடானது (நன்றாய்) நடத்தப்பட வேண்டும் (1 தீமோ. 3:4, 5)?*

### மற்றவர்கள் மீது - சபையின் மீது கவனமாய் இருத்தல்

1. **இந்த கவனம் நிறைந்த தன்மை யார் மீது செலுத்தப்பட வேண்டியதாய் உள்ளது (அப். 20:28)?**
   - *அ. சபை என்பது "மந்தை" என்றிருந்தால், மூப்பர்கள் யாராக இருக்கின்றனர்?*
   - *ஆ. தேவனுடைய வீட்டில் மேய்ப்பர்களுக்குள்ள தகுதி நிலைகள் இரண்டினைக் குறிப்பிடவும் (1பேது. 5:4)?*
2. **1 பேதுரு 5:2ல், முதல் வாக்கியமானது கவனித்தலின் அடுத்த படிநிலையைத் தருகின்றது, அது என்ன?**
   - *அ. "தேவனுடைய மந்தையை மேய்த்து" என்பது எதனை அர்த்தப் படுத்துகின்றது?*
   - *ஆ. "தேவனுடைய மந்தையை" மேய்ப்பதில் அடங்கியுள்ள ஆறு விஷயங்களைக் குறிப்பிடவும் (1 தெச. 5:14, 15).*
3. **மூப்பர்கள் எதை "உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய்" விழித்திருக்க வேண்டும் (எபி. 13:17)?**
   - *அ. அவர்கள் ஏன் இவ்வாறு விழித்திருக்க வேண்டும்? இரண்டு காரணங்களைத் தரவும் (எபி. 13:17).*
   - *ஆ. மூப்பர்கள் மந்தையை அறிந்திருக்க வேண்டாமா? அவர்கள்*

*எத்தனை பேர் உள்ளனர்? அவர்கள் யார் என்று அறிய வேண்டாமா? அவர்கள் எவ்வாறு வாழ்கின்றனர்? அவர்கள் எங்கே வாழ்கின்றனர்?*

*இ. பழங்கால மேய்ப்பர்கள் தங்கள் மந்தையை எவ்வளவு நன்றாய் அறிந்திருந்தனர் (யோவா. 10:3)? இதற்குப் பதில் தரும் வகையில், மேய்ப்பனை ஆடுகள் எவ்வளவு நன்றாய் அறிந்திருந்தன (யோவா. 10:4, 5)?*

## ஆவிக்குரிய உணவைத் தரும் நிர்வாகிகள்

**1. மூப்பர்கள் தேவனுடைய மந்தைக்கு எவ்வாறு ஊட்டம் அளிக்க வேண்டியவர்களாய் உள்ளனர் (அப். 20:28)?**

*அ. கிறிஸ்துவுக்குள் உள்ள குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டியது என்ன (1 பேது. 2:2)? அவர்களுக்கு ஏன் இவ்விதமான உணவு அளிக்கப்பட வேண்டும் (எபி. 5:13)? கொரிந்தியர்களில் சிலருக்குப் பவுல் ஏன் இவ்விதமாய் உணவளித்தார் (1 கொரி. 3:2, 3)?*

*ஆ. முழு வளர்ச்சி பெற்ற மனிதர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியது என்ன (எபி. 5:14)?*

**2. வசனத்தின் பாலையும் பலமான உணவையும் மூப்பர்கள் எவ்வாறு தர வேண்டும் (1 தெச. 5:14, 15)?**

**3. மூப்பர்கள் மந்தையின் "இரத்தப் பழியிலிருந்து நீங்கலாகி" இருப்பது எப்பொழுது (அப். 20:26, 27)?**

*அ. அவர்கள் எதனைப் பின்வாங்காமல் காத்துக் கொள்ள வேண்டும்? எவ்வாறு (1 தீமோ. 3:9)?*

*ஆ. போதனை யாவும் செய்ய வேண்டும் என்பது மூப்பர்களுக்கு அவசியமா (எபே. 4:11ஆ)?
இதைச் செய்ய வெற்றிகரமாகவும் ஞானமாகவும் மற்றவர்களைத் தேர்ந்து கொள்ளுதல் ஆகாதா?*

*இ. பிரசங்கித்தல் மற்றும் போதித்தல் யாவும் யாருடைய மேற்பார்வையின் கீழ் செய்யப்பட வேண்டும்?
சுவிசேஷக் கூட்டங்கள் மற்றும் உள்ளூர்ப் பிரசங்கித்தல் ஆகியவற்றை யார் தலைமையேற்று நடத்த வேண்டும்?*

*ஈ. சுவிசேஷகரும் உள்ளூர்ப் பிரசங்கியாரும் பிரசங்கிக்க வேண்டியது என்ன (2 தீமோ. 4:2)?
பிரசங்கியார்களும் போதகர்களும் என்ன செய்யுமாறு மூப்பர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும் (அப். 20:27)?*

## தேவனுடைய வீட்டை ஆளுதல்/நடத்துதல்

**1. மூப்பர்கள் ஆள்பவர்களாய் உள்ளார்களா (1 தெச. 5:12; 1 தீமோ. 5:17)?**

*அ. அவர்கள் எவற்றுடன் ஆளுகை செய்ய வேண்டும் (ரோமர் 12:8)? இவ்விதமாக அவர்கள் ஆளுகை செய்தால்*

*அவர்கள், ஊழியங்கள் யாவற்றையும் தூண்டி விடுவார்களா?*

*ஆ. அவர்கள் எவ்வாறு ஆளுகை செய்ய வேண்டும் (1 தீமோ. 5:17)?*

*இ. எபி. 13:7ஐப் படிக்கவும். அவர்கள் எதைப் போதிப்பதினால் ஆளுகை செய்ய வேண்டும்?*

*ஈ. எபி. 13:7ன் கடைசி இரு வாக்கியங்களைப் படிக்கவும். இது மூப்பர்கள் எவ்விதமாய் ஆளுகை செய்ய வேண்டும் என்று போதிக்கின்றது?*

*உ. இ மற்றும் ஈ ஆகியவற்றிலிருந்து, மூப்பர்கள் மிகவும் செயல்விளைவுடன் ஆளுவது எவ்வாறு?*

## அனுபவம் வாய்ந்த மூப்பரின் அறிவுரை

1. ***எஜமானருடைய ஊழியத்தில் இவ்வாறு அனுபவம் வாய்ந்தவர் யார் (1 பேது. 1:1; 5:1)?***
2. ***சக மூப்பர்களுக்கு அறிவுரை கூற யாரால் முடியும் (1 பேது. 5:1)?***
3. ***கண்காணிப்பு எந்த விதத்தில் செயல்படுத்தப்படக் கூடாது (1 பேது. 5:2ஆ, 3அ)? செய்யக் கூடாத மூன்று விஷயங்கள் யாவை?***
4. ***கண்காணிப்பு எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் (1 பேது. 4:2அ, 3ஆ)?***

   *கண்காணிப்பைச் செயல்படுத்துவதில் செய்யப்படுகின்ற விஷயங்கள் எத்தனை/யாவை (1 பேது. 5:2அ, 3ஆ)?*

   *அ. ''கண்காணிப்பைச் செயல்படுத்துதலின்'' சக்தி என்ன? மூப்பர்கள் சபை நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்க வேண்டியவர்களா?*

   *ஆ. அவர்கள் எல்லா ஊழியங்களையும் செய்ய வேண்டுமா, அல்லது ஊழியம் ஞானத்துடன் செய்யப்படுகிறதா என்று அவர்கள் கவனிக்க வேண்டுமா?*

   *இ. போதகர்கள் யாவரிடத்திலும் அவர்கள் (மூப்பர்கள்) கேட்டுக் கொள்ள வேண்டியது என்ன (1 தீமோ. 4:12)? எது தெளிவாய் இருக்க வேண்டும் (தீத்து 2:7ஆ, 8)?*
5. ***உண்மை நிறைந்த மூப்பர்களுக்குக் கிடைக்கும் பலன் என்ன (1 பேது. 5:4)?***